







# மஸ்ஜிட் இந்தியாவில் மண் உள்வாங்கிய குழியில் இந்தியாவைச் சேர்ந்த பெண் தவறி விழுந்து பலி












இரா.கோபி / நமது நிருபர்

கோலாலம்பூர், ஆக.24–
தலைநகர் மஸ்ஜிட் இந்தியா சாலையில் மண் உள்வாங்கிய ஆழமான குழியில் இந்தியாவைச் சேர்ந்த ஒரு பெண் தவறி விழுந்திருக்கக்கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

நேற்று காலை 8.00 மணிக்கு இச்சம்பவம் நிகழ்வதற்கு முன்பு அவர் அப்பகுதியில் தன் குடும்பத்தினருடன் அந்த இடத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் கிடைத்த தொடக்ககட்ட தகவலின்படி அக்குழி 8 மீட்டர் ஆழம் இருக்கக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இங்கு தீயணைப்பு மீட்புப் படையின் 2 இயந்திரங்களைக் கொண்டு அப்பெண்ணைத் தேடி மீட்கும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது.

இதனிடையே, இங்கு குழியில் விழுந்தவர் தமிழ் நாட்டைச் சேர்ந்த குப்பம் என்ற இடத்தில் வசித்து வரும் 46 வயதுடைய விஜயலெட்சுமி என்று அப்பெண்ணின் கணவர் மாதவன் தெரிவித்துள்ளார்.

இந்த மீட்புப் பணியை மேற்கொள்ள தித்திவங்சா, ஹாங் துவா தீயணைப்பு நிலையங்களைச் சேர்ந்த 15 தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அந்தக் குழியில் விழுந்து நிலத்தடியில் புதையுண்ட ஒரு பெண் காணப்படுவதை கோலாலம்பூர் தீயணைப்பு நடவடிக்கை மைய கமாண்டர் முகமட் ரிடுவான் அக்யார் உறுதிப்படுத்தினார்.

சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு மலேசிய சிறப்பு மீட்பு நடவடிக்கை குழு, மோப்ப நாய் பிரிவினரும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அதோடு, சம்பவ இடத்திற்கு விரைந்த கோலாலம்பூர் போலீஸ் தலைவர் டத்தோ ருஸ்டி கூறுகையில், நான் இன்றுதான் பணியைத் தொடங்குகிறேன். இந்தச் சம்பவ இடத்தில் காவல்துறை, மாநகராண்மைக் குழு, தீயணைப்புக் குழு ஈடுபட்டு அவரைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது வரை, சிசிடிவி மூலம் ஒருவர்தான் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

அவர் இரண்டு மாத காலமாக இந்தியாவிலிருந்து இங்கு வந்து தங்கியிருப்பதாகவும் இன்னும் சில நாட்களில் நாடு திரும்புவதாகவும் தெரியவந்துள்ளது.

அவர் நடந்து செல்லும் போது திடீரென விழுந்ததாக தெரிய வந்துள்ளது.

அவர் விழுந்ததை பார்த்த சாட்சி உள்ளதோடு அதோடு அப்பெண்

வேறு எங்கும் காணவில்லை என தெரிய வந்துள்ளது.

அங்கு நீரோட்டம் அதிகமாக உள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் படிப்படியாக மீட்பு பணிகளும் பகுதியைச் சரி செய்யும் முயற்சிகளில் தீயணைப்புக் குழுவினரும் சம்பந்தப்பட்ட தரப்பினரும் ஈடுபடுவார்கள்.

பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என டத்தோ ருஸ்டி தெரிவித்தார்.





